பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
27 03 2026 FRIDAY 12 40

ஆகாஷவாணி
(Tune)
செய்திகள் -

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி காணொலி வாயிலாக முதலமைச்சர்களுடன் இன்று மாலை ஆலோசனை நடத்துகிறார்.
2. பெட்ரோல், டீசல் மீதான கலால் வரியை மத்திய அரசு குறைத்துள்ளது.
3. மேற்காசிய பிரச்சினையை தொடர்ந்து ஊரடங்கு கொண்டு வரும் திட்டம் எதுவும் இல்லை என்று பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. ஹர்திப் சிங் புரி தெரிவித்துள்ளார்.
4. அமெரிக்காவில் H1-B விசா பெற்று பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊதியத்தை உயர்த்துவது குறித்து அந்நாட்டு அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளது.
5. அஹமதாபாத் சர்வதேச டென்னிஸ் போட்டியில் சித்தார்த் ராவத் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

...இனி விரிவான செய்திகள்...

>>>>>> <<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி காணொலி வாயிலாக மேற்காசிய நிலவரம் குறித்து இன்று மாலை முதலமைச்சர்களுடன் ஆலோசனை நடத்துகிறார்.

இந்த ஆலோசனைக்கூட்டத்தில் பெட்ரோலிய பொருட்கள், உரம் உள்ளிட்டவை நுகர்வோருக்கு போதுமான அளவு விநியோகிப்பது குறித்து விவாதிக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ள தமிழகம், கேரளம், அசாம், மேற்கு வங்கம், புதுச்சேரி முதலமைச்சர்களைத் தவிர அனைத்து மாநில முதலமைச்சர்களுடன் பிரதமர் ஆலோசனை மேற்கொள்கிறார்.

தேர்தல் நடத்தை நெறிமுறைகள் காரணமாக இம்மாநிலங்களின் முதல் அமைச்சர்கள் இதில் பங்கேற்க மாட்டார்கள் என்றும், இம்மாநிலங்களின் தலைமை செயலாளர்களுடன் மத்திய அமைச்சரவை செயலகம் தனியாக ஆலோசனை மேற்கொள்ளவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>> <<<<<<

பெட்ரோல், டீசல் மீதான கலால் வரியை மத்திய அரசு குறைத்துள்ளது.

மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பெட்ரோல் மீதான கலால் வரியை 13 ரூபாயில் இருந்து 3 ரூபாயாக குறைக்கப்பட்டள்ளது.

டீசல் மீதான பத்து ரூபாய் கலால் வரி முற்றிலும் நீக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், மேற்காசிய பிரச்சினையால் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்துள்ளதால் நாட்டில் பெட்ரோல், டீசல் விலை உயர்வை கட்டுப்படுத்த இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

பெட்ரோலிய பொருட்களின் விலை உயர்வில் இருந்து நுகர்வோரை பாதுகாக்க இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

>>>>>> <<<<<<

டீசல் மீதான ஏற்றுமதிக்கு லிட்டருக்கு 21 ரூபாய் 50 காசும் விமான எரிபொருள் ஏற்றுமதிக்கு லிட்டருக்கு 29 ரூபாய் 50 காசும் அதிக வரி சுமத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் இந்த பெட்ரோலிய பொருட்கள் நாட்டில் தேவையான அளவுக்கு கிடைப்பது உறுதி செய்யப்படும் என்றும் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

>>>>>> <<<<<<

மேற்காசிய பிரச்சினையை தொடர்ந்து ஊரடங்கு கொண்டு வரும் திட்டம் எதுவும் இல்லை என்று மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. ஹர்திப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமுக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதவில், ஊரடங்கு தொடர்பாக வரும் வதந்திகளை நம்ப வேண்டுடாம் என்று கூறியுள்ளார்.

மத்திய அரசு எரிசக்தி இறக்குமதி தொடர்பாக கண்காணித்து வருவதாக கூறிய அவர், அத்தியாவசிய பொருட்கள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்தார்.

இது தொடர்பாக சவால்களை எதிர்கொள்ள இந்தியா தயாராக இருப்பதாகவும், திரு. ஹர்திப் சிங் புரி கூறியுள்ளார்.

மேற்காசிய பிரச்சினையால் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயெய் விலை அதிகரித்து வரும் நிலையில் நுகர்வோர்களை விலை உயர்வில் இருந்து பாதுகாக்க மத்திய அரசு நடவடிக்கைஎடுத்து வருவதாக மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்திப் சிங் புரி கூறியுள்ளார்.

சமுக வலை தளத்தில் அவர் வெளியிட்டுள்ள மற்றொரு சமுக வலைதளப் பதிவில், மத்திய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கையில் மூலம் பெட்ரோலிய பொருட்களின் விலை உயரவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச சந்தையில் பீப்பாய் ஒன்றுக்கு 70 டாலராக இருந்த கச்சா எணணெயின் விலை தற்போது 122 டாலராக அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

இதனையடுத்து பெட்ரோல் டீசல் விலை தென் கிழக்கு ஆசிய நாடுகளில் 50 சதவீதம் வரையிலும் வட அமெரிக்காவில் 30சதவீதம் வரையிலும், ஐரோப்பாவில் 20 சதவீதம் வரையிலும், ஆப்பிரிக்க நாடுளில் 50 சதவீதம் வரையில் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

>>>>>> <<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு பெட்ரோலிய பொருட்களின் விலையை உயர்த்தாமல் நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச அளவில் பெட்ரோலிய பொருட்களின் விலை உயர்ந்து வரும் நிலையில் நாட்டில் பெட்ரோல் லிட்டர் 24 ரூபாயும் டீசலுக்கு லிட்டருக்கு 30 ரூபாயும் மானியம் வழங்கி வருவதாக தெரிவித்துள்ளார்.

பெட்ரோலிய பொருட்களின் ஏற்றுமதியை கட்டுப்படுத்த ஏற்றுமதி வரி சுமத்தப்பட்டுள்ளதாகவும் திரு. ஹர்திப் சிங் புரி கூறியுள்ளார்.

>>>>>> <<<<<<

கேரளம், அசாம், புதுச்சேரியில் வரும் ஒன்பதாம் தேதி நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரசாரம் தீவிரமடைந்துள்ளது.

புதுச்சேரியில் உள்ள 30 தொகுதிகளில் 294 வேட்பாளர்கள் களத்தில் உளளனர். தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிஜேபி மகளிர் அணி தலைவர் திருமதி. வானதி சீனிவாசன் பல்வேறு இடங்களில் பிரசாரம் மேற்கொண்டார்.

*காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சி கூட்டணிக்கு ஆதரவாக புதுச்சேரி மாநில தலைவர் திரு. வைத்திலிங்கம், கோட்டுப்பாளையம், Paulpet உள்ளிட்ட இடங்களில் பிரசாரம் மேற்கொள்கிறார்.*

*அசாமில் உள்ள 126 தொகுதிகளில் 722 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.*

*கேரளத்தில் உள்ள 140 தொகுதிகளில் 651 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.*

*வாக்குப்பதிவு அடுத்த மாதம் ஒன்பதாம் தேதி நடைபெறுகிறது. வாக்கு எண்ணிக்கை மே மாதம் நான்காம் தேதி நடைபெறும்.*

>>>>>> <<<<<<

*தமிழக சட்டப்பேரவை தேர்தலில் நூறு சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்யும் வகையில் மாநிலம் முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.*

*கோவை மாவட்டத்தில் உள்ள செட்டிப்பாளையம் மைதானத்தில் நடைபெற்ற பாரா ரைடிங் மூலம் வாக்களிக்க வேண்டியதின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ்பைட்- ஹரி* 29 *Sec)*

*கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வாக்களிப்பதின் அவசியம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ்பைட்- ராஜா* 28 *Sec)*

>>>>>> <<<<<<

*அமெரிக்காவில் H1-B விசா பெற்று பணிபுரியும் வெளிநாடுகளைச் சேர்ந்த பணியாளர்களுக்கு ஊதியத்தை ஏற்றுவது குறித்து அந்நாட்டு தொழிலாளர் நலத்துறை நடவடிக்கை எடுக்கவுள்ளது.*

*இது தொடர்பாக இத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், அமெரிக்காவில் நிலவும் ஊதியத்துக்கு இணையாக வெளிநாடுகளில் இருந்து வந்து பணிபுரிபவர்களுக்கும் சம ஊதியம் வழங்குவதற்கான திட்டம் கொண்டு வரப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க தொழிலாளர் நலத்துறை அமைச்சர் Lori Chavez, அதிபர் திரு. டோனல்ட் டிரம்ப் தலைமையிலான அரசு, அனைத்து பணியாளர்களுக்கும் சம ஊதியம் வழங்க நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் தெரிவித்தார்.*

*H1-B விசா பெற்று அமெரிக்காவில் பணிபுரியும் பணியாளர்கள் அந்நாட்டு பணியாளர்களை விட பத்தாயிரம் டாலர் குறைவாக ஊதியம் பெறுவதாக அரசு ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.*

*இந்த திட்டத்தின்படி புதிதாக H1-B விசா பெறுபவர்களுக்கு அதிக ஊதியம் கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

>>>>>> <<<<<<

*இந்தியாவுடனான உறவுகள் வலுவடைந்து வருவதாக அமெரிக்க அதிபர் டோனல்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.*

*இது தொடர்பாக அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அதிபரின் அறிக்கை அடங்கிய சமூகவலைதளப் பதிவில், பிரதமர் திரு. நரேந்திர மோடியும் அதிபர் திரு. டோனல்ட் டிரம்பும் உலகிலேயே செயல் திறன் கொண்ட தலைவர்கள் என்று கூறியுள்ளது.*

>>>>>> <<<<<<

அஹமதாபாத்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தார்த் ராவத் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் *7-6, 6-3* என்ற செட் கணக்கில் இந்தியாவின் *Dig vijay Pradapsingh*-ஐ வென்றார்

-----------

துனிசியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Harmeet Desai* காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் அவர், *12-10, 11-8, 4-11, 11-8* என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் *Nikita Artmenko*-வை வென்றார்.

இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் *Sutirtha Mukherje*-யும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--------------

நாக்பூரில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Zeel Desai* அரை இறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>> END<<<<<<